ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: **dcommunications@cbsl.lk, communications@cbsl.lk**
வெப்தளம்: **www.cbsl.gov.lk**


# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| **வெளியிடுபவர்** | புள்ளிவிபரத் திணைக்களம் |
| **திகதி** | 2016.02.23 |

**2016 சனவரியில் பணவீக்கம்**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினால் (2013=100) அளவிடப்பட்டவாறான பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 திசெம்பரின் 4.2 சதவீதத்திலிருந்து 2016 சனவரியில் -0.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2015இன் தொடர்பான காலப்பகுதியின் உயர்தளமே முக்கிய காரணமாகும். தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி பணவீக்கம் 2015 திசெம்பரில் பதிவு செய்யப்பட்ட 3.8 சதவீதத்திலிருந்து 2016 சனவரியில் 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2015 திசெம்பரிலிருந்து 2016 சனவரியில் 1.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இம்மாதாந்த வீழ்ச்சிக்கு உணவு மற்றும் வெறியமல்லாக் குடிவகைகளிலுள்ள விடயங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாக அமைந்தது. காய்கறிகள், பச்சை மிளகாய், எலுமிச்சம் பழம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் தேங்காய் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை இம்மாத காலப்பகுதியில் உடன்மீன், கருவாடு, சிலவகை பழவர்க்கங்கள் மற்றும் முட்டை என்பனவற்றின் விலைகள் அதிகரித்தன. 2016 சனவரி மாதகாலப்பகுதியில் வெறியமல்லாக் குடிவகைகள், புகையிலை மற்றும் போதைப் பொருட்கள்; மற்றும் ஆடைகள் மற்றும் காலணிகள் துணைத்துறைகளிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்தன. அதேவேளை, 2016 சனவரி காலப்பகுதியில் போக்குவரத்து துணைத்துறையின் விலைகள் வீழ்ச்சியடைந்தன. வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; தளபாடங்கள், வீட்டு உபயோகச் சாதனங்கள், வழமையான வீட்டு அலகுகளின் பேணல்; நலன்; தொடர்பூட்டல்; பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம்; கல்வி; உணவகங்கள் மற்றும் சுற்றுலாவிருத்திகள்; மற்றும் பல்வகைப் பொருட்கள் மற்றும் துணைவகைகளின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.




**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**

**தளம் : 2013 = 100**

| **ஆண்டு** | **மாதம்** | **சுட்டெண்** | **மாதாந்தச் சதவீத மாற்றம்** | **ஆண்டுக்கு ஆண்டு சதவீத மாற்றம்** | **ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம்** |
|---|---|---|---|---|---|
| **2014** | சனவரி | 103.1 | | | |
| | பெப்புருவரி | 103.0 | -0.1 | | |
| | மாச்சு | 103.2 | 0.2 | | |
| | ஏப்பிறல் | 104.1 | 0.9 | | |
| | மே | 104.9 | 0.8 | | |
| | யூன் | 106.2 | 1.2 | | |
| | யூலை | 107.0 | 0.8 | | |
| | ஓகத்து | 106.4 | -0.6 | | |
| | செத்தெம்பர் | 106.4 | 0.0 | | |
| | ஒத்தோபர் | 106.0 | -0.4 | | |
| | நவெம்பர் | 106.9 | 0.8 | | |
| | திசெம்பர் | 108.6 | 1.6 | | |
| **2015** | சனவரி | 112.8 | 3.9 | 9.4 | |
| | பெப்புருவரி | 108.9 | -3.5 | 5.7 | |
| | மாச்சு | 107.6 | -1.2 | 4.3 | |
| | ஏப்பிறல் | 107.0 | -0.6 | 2.8 | |
| | மே | 108.0 | 0.9 | 3.0 | |
| | யூன் | 109.1 | 1.0 | 2.7 | |
| | யூலை | 108.9 | -0.2 | 1.8 | |
| | ஓகத்து | 108.4 | -0.5 | 1.9 | |
| | செத்தெம்பர் | 108.4 | 0.0 | 1.9 | |
| | ஒத்தோபர் | 109.2 | 0.7 | 3.0 | |
| | நவெம்பர் | 112.0 | 2.6 | 4.8 | |
| | திசெம்பர் | 113.2 | 1.1 | 4.2 | 3.8 |
| **2016** | சனவரி | 112.0 | -1.1 | -0.7 | 2.9 |

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்